சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி. 156/2016

2022 ம் ஆண்டு **02.09.2022** ம் தேதி ராமசாமி

என்பவரின் சாட்சியாகிய மசா 1 ன் வாக்குமூலம்

(1969 ம் ஆண்டில் 44-வது பிரிவின்படி) திருமதி.பி.மோகனவள்ளி, பி.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்கள் முன்னிலையில், சார்பு நீதிமன்ற இளநிலை உதவியாளர் திரு.என்.சரவணன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமசாமி | தாலூக்கா | பொள்ளாச்சி |
| க.பெ. (அ) த.பெ. | மாகாளி | சமயம் | இந்து |
| கிராமம் | நாதேகவுண்டன்புதூர் | வயது | 55 |

முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் மனுதாரர். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். என் தரப்பு ஆவணங்களாக

1.மசாஆ 1 – 04.04.2016 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை சான்று நகல்.

2.மசாஆ 2 – மாதிரி வரைபடம் சான்று நகல்.

3.மசாஆ 3 – பார்வை மகசர் சான்று நகல்.

4 மசாஆ 4 – TN 41 AE 8470 இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை சான்று நகல்.

5.மசாஆ 5 – TN 41 AB 2751 இரு சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை சான்று நகல்.

6.மசாஆ 6 – முரளியின் பிரேத பரிசோதனை அறிக்கை சான்று நகல்.

7.மசாஆ 7 – 30.05.2016 தேதியிட்ட குற்ற அறிக்கை சான்று நகல்.

8.மசாஆ 8 – 27.04.2016 தேதியிட்ட முரளியின் இறப்புச்சான்றிதழ் உண்மை நகல்.

9.மசாஆ 9 – 26.05.2016 தேதியிட்ட முரளியின் வாரிசுச்சான்றிதழ் உண்மை நகல்.

10.மசாஆ 10– 13.07.2009 தேதியிட்ட முரளியின் ஓட்டுநர் உரிமம் நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது).

11.மசாஆ 11 – 07.06.1999 தேதியிட்ட 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் ஜெராக்ஸ்

12.மசாஆ 12– TN 41 AB 2751 இரு சக்கர வாகனத்தின் காப்பீடுச்சான்று நகல்.

எனவே எனது தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை ஏற்று மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி

பொள்ளாச்சி